**STC.NO. 52/2021 DW-1**

நாள் : 03.09.2025

பெயர் : முகமது அஸ்லாம்

த/பெ : முகமது தாகீர் பாஷா

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கடந்த 20.02.2020 அன்று சென்னை NCLT Bench முன்பு ரூ.3,00,000/– க்கான வரைவோலை புகார்தாரருக்கு 1 ம் எதிர்மனுதாரரால் அளிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் நிறுவனத்திற்கு எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வளவு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு எந்த நிறுவனத்தால் யாருக்கு அளிக்கப்பட்ட காசோலையின் மீது நடந்து வருகிறது என்றால் அப்துல் வாகஃப் என்பவர் புகார்தாரர் நிறுவனத்திற்கு அளித்த காசோலை வழக்காகும். அப்துல் வாகஃப் என்பவர் யார் என்றால் எனது ஊரை சேர்ந்தவர் எனக்கு தெரிந்தவர். அவர் என்ன வியாபாரம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் இன்று அப்துல் வாகஃப் க்காக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். அப்துல் வாகஃப் இந்த வழக்கில் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் எதற்காக ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டார் என்றால் கசோலை வழங்கியதற்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அப்துல் வாகஃப் இந்த வழக்கு காசோலையை யாருக்காக புகார்தாரருக்கு கொடுத்தார் என்றால் தெரியாது. இந்த வழக்கின் 2 ம் எதிரி முகமது சாலீம் எனது மூத்த சகோதரர் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 6 ம் எதிரி அப்துல் வாகஃப் எதற்காக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற விரவத்தை 2 ம் எதிரியை கேட்டு நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். புகார் அளித்தவரை தான் கேட்க வேண்டும் என்று

எனது அண்ணன் கூறினார். இந்த வழக்கில் எனது முதல் விசாரணையை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் இந்த வழக்கின் 6 ம் எதிரி 1 ம் எதிரியின் Sister நிறுவனம் இல்லை என்று நான் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். அதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது போன்ற ஆவணங்கள் இல்லை.

இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது என்று கூறியுள்ளேன் அப்படி இருக்கும் போது 6 ம் எதிரி 1 ம் எதிரியின் Sister Concern இல்லை என்று நான் எவ்வாறு கூறுகிறேன் என்றால் இல்லை என்று எனக்கு நன்றாக தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கை Quash செய்ய 1–5 எதிரிகளான நாங்கள் மனு தாக்கல் செய்தோமோ என்றால் நினைவில்லை. பார்த்து தான் கூற வேண்டும்.என்னிடம் காட்டப்படும் சென்னை உயர் நீதிமன்றத்தில் Crl.OP.No.15219, 15223, 15224 /2022 அளிக்கப்பட்டுள்ள உத்திரவானது இவ்வழக்கின் 1–3, 5 ம் எதிரிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கான உத்திரவு என்றால் எனக்கு தெரியவில்லை. இதே போன்ற ஒரு மனு இவ்வழக்கின் 4 ம் எதிரியான எனது தாயார் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது.

நாங்கள் தாக்கல் செய்த மனுவில் 1 ம் எதிரிக்கு மட்டும் மனு அனுமதிக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் முழு நேர இயக்குநராக 1 ம் எதிரி நிறுவனத்தில் இருந்ததால் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் நான் இயக்குநர் மட்டும் தான் நிறுவனத்தின் தினசரி வேலைகள் பற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணன் முகமது சாலீம்க்கு தான் தெரியும். 1ம் எதிரிக்கும், 6 ம் எதிரிக்கும் இடையே நடந்த பரிவர்த்தனைகள் சுமார் 5 கோடிக்கு மேல்

உள்ளது என்பது வங்கி கணக்கு பட்டியல் காண்பிக்கிறது என்றால் எனக்கு தெரியாது. தினசரி வேலைகளில் நான் ஈடுபடுவதில்லை. தினசரி வேலைகள் என்ன என்றால்  எந்த வேலைகளிலும் நான் ஈடுபட்டதில்லை, இயக்குநராக பெயர் அளவில் உள்ளேன். அப்படி என்றால் அந்த வேலைகளை யார் பார்த்துக்கொண்டது என்றால் அதுவும் எனக்கு தெரியாது.

1 ம் எதிரி நிறுவனம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்றால் சரியாக தெரியாது. தோரயமாக எந்த ஆண்டு என்றால் 2000 – 2001 இருக்கலாம். அது தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை இயக்குநருக்கான ஊதியம் பெற்றுள்ளேன் என்றால் பார்த்து தான் கூறவேண்டும். ஆனால் நான் ஊதியம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் முழு நேர இயக்குநராக வேலை பார்த்ததால் தான் நான் அந்த ஊதியம் பெற்றேன் என்றால் இல்லை. நான் இயக்குநராக இருந்த காலகட்டத்தில் தான் புகார்தாரருக்கும், எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கும் கெமிக்கல் பரிவர்தனை நடைபெற்றது என்றால் தெரியாது. இன்று வரை நான் அந்த நிறுவனத்தின் இயக்குநர் தான் என்றால் தெரியாது. நான் 1 ம் எதிரி நிறுவனத்தில் முழு நேர இயக்குநர் இல்லை என்பதற்கு Register of Company லிருந்து ஆவணம் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் அப்படி வாங்க வேண்டும் என்றே எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு கூட நான் அந்த நிறுவனத்தின் முழு நேர இயக்குநர் இல்லை என்பதை ROC க்கு தெரிவிக்கவில்லை என்றால் அப்படி தெரிவிக்க வேண்டும் என்று தெரியாது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA
District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.09.04 13:38:19 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet